மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# குலசேகராழ்வாரும் இராமாவதாரமும்

முனைவர் வீ. மோகன்
தமிழ்த்துறைத் தலைவர், தமிழ் உயராய்வு மையம்
யாதவர் கல்லூரி, மதுரை

அ. பத்மமாலினி
முனைவர் பட்ட ஆய்வாளர்
யாதவர் கல்லூரி, மதுரை

**முன்னுரை**

கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தமிழக மூவேந்தர்கள் வலிமை குன்றியிருந்தனர். அரசியல், சமுதாயம், கலை, சமயம் ஆகிய துறைகளில் தேக்கநிலை காணப்பட்டது. வடநாட்டிலிருந்து வந்த சமண, பௌத்த சமயங்கள் தமிழ்நாட்டில் வலிமை பெறத் தொடங்கின. களப்பிரர் ஆட்சி ஆங்காங்கே நடைபெற்றது. அவர்களுக்குப் பின் பல்லவர்கள் தலைதூக்கினர். பிராகிருதம், பாலி, வடமொழி ஆகியவற்றின் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. தமிழ் மொழியும், தமிழ் இலக்கியங்களும், தமிழ்க்கலைகளும், தமிழர் சமுதாயம், சமயமும் தம் வலிமையிழந்து இருந்தன. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின் தமிழகத்தில் பக்தி இயக்கம் பட்டிதொட்டியெல்லாம் பரவியது. அதனால் மக்களின் வாழ்க்கை மதிப்பும் மாறியது. "உலகில் சிறந்தது பக்தி வழியே என்று பரப்பப்பட்டது. இறைவன் திருப்பாதத்தை அடையவே வாழ வேண்டும் என்று வாழ்வின் மதிப்பு மாற்றியமைக்கப்பட்டது. இதனால் அறமாயினும், மறமாயினும், காதலாயினும் பக்தி என்னும் பார்வையிலேயே பார்க்கப்பட்டது" என்று மங்கையர்க்கரசி குறிப்பிடுகிறார். தமிழ் மொழிக்குச் செழுமை சேர்த்த பெருமை பக்தி இலக்கியங்களைச் சேரும். ஆழ்வார்களாலும், நயன்மார்களாலும் தமிழகத்தில் பக்திநெறி உபயகாவேரியாகப் பெருக்கெடுத்தபோது திவ்வியப் பிரபந்தம், தேவாரம் போன்ற தெய்வப் பனுவல்கள் தோன்றின" என்று ம.பெ.சீனிவாசன் குறிப்பிடுகிறார். திவ்வியப் பிரபந்தம் தென்னாட்டில் வைணவப் பெருமக்களால் போற்றப்படும் சிறந்த பக்திப் பனுவல் ஆகும். தமிழ் மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாகக் கொள்ளுவதற்குரிய பெருந்தகுதி வாய்ந்தது. அத்தகைய திவ்விய பிரபந்தத்தில் குலசேகராழ்வார் பாடிய பெருமாள் திருமொழியில் இராமாவதாரச் சிறப்பு பற்றி காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வைணவம்**

"ஆன்மநேயத்தை அடிப்படையாகக்கொண்டு மனிதநேயத்தை வளர்க்க முற்படும் மதம் வைணவம்" என்று புஷ்பராஜன் குறிப்பிடுகிறார். "வைஷ்ணவம்" என்ற சொல்லின் தமிழாக்கம் "வைணவம்" ஆகும். "வைணவம்" என்பது விட்ணுவைப் பரம்பொருளாகவும், முழுமுதற் கடவுளாகவும், பரப்பிரம்மமாகவும் கொண்ட சமயத்துக்குப் பெயர் ஆகும்". விட்ணு என்றால் எங்கும் பரவி வியாபித்து நிற்பவன் என்று பொருள்படும்.

**ஆழ்வார்கள்**

"ஆழ்வார்" என்னும் சொல்லுக்கு இறைமைக் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர் என்பது பொருள். "வேறொன்றில் கண் வையாதே பகவத் குணங்களிலே ஆழங்காற்பட்டிருந்தமையால் இவர்களுக்கு ஆழ்வார்கள் என்னும் பெயராயிற்று" என்று ம.பெ..சீனிவாசன் குறிப்பிடுகிறார். திருமாலை வழிபடும் வைணவ சமயப் பெரியோர்கள் ஆழ்வார்கள் ஆவர். பன்னிரு ஆழ்வார்களுள் குலசேகராழ்வர் அரசானாக இருந்து திருமாலின் தொண்டனாய் வாழ்ந்தவர்.

**குலசேகராழ்வார்**

பன்னிரு ஆழ்வார்களில் இருவர்தான் பாராளும் அரசர்களாயிருந்து பரம்பொருளின் அடியார்களாக வாழ்ந்தவர்கள். ஒருவர் திருமங்கை மன்னர் எனப்படும் திருமங்கை ஆழ்வார். மற்றொருவர் குலசேகராழ்வார். இவர் அரச குலத்தில் பிறந்தும், அவ்வரச பதவியை வெறுத்து, ஆண்டவனுக்கு அடிமை தொண்டாற்றவே பெரிதும் விரும்பினர் என்று அறியமுடிகின்றது.

வேழமுடைத்து மலைநாடு, என ஔவையாரால் புகழப்பட்ட சேரநாட்டில் "திடவிரதன், எனப் பெயர் பெற்ற சேரமன்னனுக்கு திருவஞ்சிக்களம் என்னும் கொல்லிநகரில் "ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அரச வம்சத்தில் மாசி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் ஸ்ரீ கௌஸ்துபத்தின் அம்சமாய் பிறந்தார்" என்கிறார் மதி.சீனிவாசன். அரசவை சோதிடக் கலைஞர்கள் நமது மன்னருக்கு ஒரு ஜீவரத்தினம் கிடைத்துவிட்டது என்று குழந்தையைப் பார்த்துக் கூறினார்கள். மக்களுள் மாணிக்கமாக வளரப் போகிறான் இவன் என்று முகத்தைப் பார்த்தே குறி சொன்னார்கள். கேரளாவில் உள்ள திருவட்டாறு என்னும் திருத்தலத்தில் எண்ணற்ற கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டு ஒன்றில் சேரநாட்டை "குலசேகரப் பெருமாள்" என்ற பெயர் கொண்ட அரசன் கி.பி.644-645-இல் ஆட்சி செய்ததாகக் குறிப்பிட்டுள்ளது. இதில் குறிப்பிட்டுள்ள குலசேகரப் பெருமாள், குலசேகராழ்வாராய் இருக்கக் கூடுமென்று ஆராய்சியாளர்கள் கருதுகின்றனர்.

**இராமாவதாரம்**

குலசேகராழ்வார் பாடிய "பெருமாள் திருமொழியில்" இராமபக்திப் பாடல்கள் முப்பத்து மூன்று ஆகும். அவை எட்டு, ஒன்பது, பத்து திருமொழிகள் முறையே கோசலை

தாலாட்டு , தசரதன் புலம்பல், இராமகாதை நிகழ்ச்சிகளை அனுபவித்தல் என்ற நிலைகளில் அமைந்துள்ளன. இராமனுக்கு தாலாட்டு பாடிய பெருமை குலசேகரரைச் சாரும். மற்ற ஆழ்வார்கள் கண்ணனுக்கு தாலாட்டு பாடல்களைப் பாடியுள்ளனர்.

**கோசலையின் மாணிக்கத் தாலாட்டு**

சோழநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றான திருக்கண்ணபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் சௌரிராஜப் பெருமாளை, குலசேகராழ்வார் குழந்தை இராமனாக நினைத்து, தொட்டிலிட்டுத் தாலாட்டுப் பாடுகிறார்.

"மன்னுபுகழ் கௌசலைதன்
மணிவயிறு வாய்த்தவனே
என்னுடைய இன்னமுதே
இராகவனே தாலேலோ"

திருக்கண்ணபுரத்து திருமாலையே இராமன் என்னும் குழந்தையாகத் தொட்டிலிட்டு, உன்னை மகனாகப் பெற்ற கௌசலையைப் போலக் காணப்பெற்றேனா? என்பது ஆழ்வாரின் ஏக்கமாகும்.

**கானகம் அடைந்தவன்**

சுற்றம் எல்லாம் தொடர்ந்துவர, மக்களெல்லாம் மனம் கலங்கி அடிச்சுவட்டைப் பின்பற்றி வரக் காட்டிற்குச் சென்ற இராமன் அற்றவர்களுக்கே அருமருந்தானவன் என்பதை

"சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கானம் அடைந்தவனே
அற்றவர் கட்கு அருமருந்தே அயோத்தி நகர்க்கு அதிபதியே
கற்றவர்கள் தாம் வாழும் கணபுரத்தென் கருமணியே
சிற்றவைதன் சொல் கொண்ட சீராமா தாலேலோ"

எனும் பாடலின் மூலம் காட்டுகிறார்

**தசரதன் புலம்பல்**

இராமன் கானகம் சென்ற நிலையில் அவன் பிரிவுக்கு ஆற்றாது தசரதன் அடைந்த துயரத்தைக் குலசேகராழ்வார் தானே தசரதனாகிப் புலம்புகிறார். ராமனுக்கு முடிசூட்டும் விழா நடக்கும் வேளையில் "நெடுங்கானம்போ" என்று கைகேயி சொன்னாள். சிங்காசனத்தின் மேல் இருந்தவனை இறக்கிக் காட்டுக்குத் துரத்திவிட்டாளே என்பதைக் குலசேகரரின் மனோசக்தி

"நன்றாக நானிலத்தை
ஆள்வித்தேன் நன்மகனே
உன்னே நானே".

என்று காட்டப்படுகிறது.

**திருச்சித்திரக் கூடம்**

சைவத்தை வளர்த்து நடராசப் பெருமானுக்குக் கோவில் எழுப்பி வழிபட்ட சோழப் பேரரசர்கள், அதே தில்லையில் சக்கரவர்த்தி திருமகனுக்கும் கோவில் எழுப்பியுள்ளார்கள். இன்று தில்லையில் நடராசர் சன்னதிக்கு இடம்புறத்தே கோவிந்தராசர் கோவிலும் அங்கே இராமபிரானும் எழுந்திருப்பதைக் கண்டு களிக்கலாம்.

"தில்லை நகர்த் திருச்சித்திரக் கூடந் தன்னுள்
எவ்வரி வெஞ்சிலைத் தடக்கை இராமன்"

என்று பாடுகிறார் அத்துடன் இராமனுடைய கதை தொடர்ந்து பாடப்படுகிறது. கைகேயின் சொல்லைக் கேட்டு இராமன் அயோத்தியை விட்டுச் சென்றான் கங்கைத் துறைக்குப் போனான். பக்திமிகுந்த குகனால் ஆற்றைக் கடந்து சித்திரகூட மலையில் இராமன் தங்கினான். அங்கே வந்த பரதனுக்கு பாதுகையும் அரசம் தந்தான் என்பதை,

"கொத்தலர் பூஞ்சுரிலர் பூஞ்சுரிசூழல் கைகேசி சொல்லால்
தொன்னகரம் துறந்து துறைக்கங்கை தன்னைப்
பகடாழயுடைக் குகனட கமாடா வனதட போய்ப் புக்குப்
பரதனுக்கு பாகமும் அரசம் தந்து
சித்திர கூடத் திருந்தான்"

என்ற பாடல் உணர்த்துகிறது.

**இராமன் வைகுந்தம் செல்லுதல்**

ஒரு நாள் வசிட்டர் முதலான முனிவர்களை அழைத்து இலக்குவன் சென்ற வழியே தானும் செல்வதாகத் தெரிவித்தான். மெல்லிய ஆடையை அணிந்துகொண்டு அரண்மனையை விட்டு யாரிடமும் சொல்லாமல் வெளியேறினார். அவரைப் பின்தொடர்ந்து மகாலெட்சுமி, பூதேவி பிராட்டியர், அரண்மனையாட்கள், பணிப்பெண்கள், அயோத்தி மக்கள் எல்லா உயிரினங்களும் பின் தொடர்ந்து சரயூ நதியில் மூழ்கி எழுந்தனர் என்பதை,

"அன்று சராசரங்களை வைகுந்தத் தேற்றி
அடலரவப் பகையேறி அசுரம் தம்மை
வென்று அலங்குமணி நெடுந்தோள் நான்கும் தோன்ற
விண்முழுது மெதிர்வரத் தன் தாமம்மேபி"

என்று பாடுகிறார் குலசேகராழ்வார்.

**முடிபுகள்**

குலசேகராழ்வாரால் விரும்பப்படும் அவராதங்கள் இராமகிருஷ்ண அவதாரங்களாகும். அதில் இராமவதாரம் மிகவும் சிறப்பு வாய்ந்து பாடப்பெற்றுள்ளது. கண்ணனின் குழந்தைப் பருவத்தைப் பாடுவது போல் இராமனின் குழந்தைப் பருவத்தைப் பாடுகிறார். இராமாவதாரத்தில் கோசலையின் மாணிக்கத் தாலாட்டு, கானகம்

அடைந்தவன், தசரதன் புலம்பல், திருச்சித்திரக்கூடம், இராமன் வைகுந்தம் செல்லுதல், போன்றவை இக்கட்டுரையில் விவரித்துரைக்கப்பட்டுள்ளன.

**பயன்பட்ட நூல்கள்**


1. சீனிவாசன். ம.பெ, வைணவ இலக்கிய வகைகள், தேவகி பதிப்பகம், சிவகங்கை, 1994.
2. சீனிவாசன். ம.பெ, குலசேகராழ்வார், சாகித்திய அகாடமி, டெல்லி, 2002.
3. சீனிவாசன். மதி, கொல்லிக்காவலன், தமிழ் உறவு, சென்னை, 1982.
4. சீனிவாசன். மதி, நாலாயிர திவ்ய பிரபந்தம், ஸ்ரீ வராகி பிரிண்டர்ஸ், சென்னை, 2002.
5. பி.ஸ்ரீ, அடிசூடிய அரசு, கலைமகள் காரியலயம், சென்னை 1958.
6. புஷ்பராஜன் .அ, மதங்கள் தேடும் மனிதம், பல்சமய உறவியல் துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை. 2002
7. மங்கயைர்க்கரசி. சிவ, பக்தி இலக்கியம் கொள்கை, திருமகள் நிலையம், சென்னை, 2004.
8. ஜெயராமன். பூ, குலசேகராழ்வார், அநுராகம், சென்னை, மூன்றாம் பதிப்பு 2007.
9. ஜெயராமன். பூ, ஸ்ரீ வைஷ்ணவம், அநுராகம், சென்னை, 2002.
10. ஸ்ரீதரன். என் (ப.ஆ), ஸ்ரீ நாலாயிர திவ்யபிரபந்தம், கங்கை புத்தக நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு 2011.